OS. 34/2022

**நாள். 26.04.2023.**

**வா.சா. 1 –** முத்துகாமாட்சி என்ற முருகன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் அரசு பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். நான் வழக்குச் சொத்துக்களில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்துக்கள் வீடுகள் என்றால் வீடு மற்றும் காலியிடம். வழக்குச் சொத்து அழகர்சாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அழகர்சாமிக்கு அவரது தந்தைவழி பாத்தியம். அழகர்சாமியின் தந்தை வலம்புரியான் சேர்வை என்றால் சரிதான். வலம்புரியான் சேர்வைக்கு அழகர்சாமி ஒரே மகன் என்றால் சரிதான். வலம்புரியான் சேர்வைக்கு வழக்கு சொத்து கிரயம்பெறப்பட்ட சொத்து என்றால் அவரது தந்தை முனியாண்டி சேர்வைக்கு தந்தை வழி பாத்தியம். முனியாண்டி சேர்வை கருப்பாயி அம்மாள் என்பவரிடமிருந்து வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மற்றொரு பகுதியை வலம்புரியான் சேர்வை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். வழக்குச் சொத்தில் வடபுற சொத்தை முனியாண்டி சேர்வையும், தென்புற சொத்தை வலம்புரியான் சேர்வையும் 2 கிரயப்பத்திரங்கள் மூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். முனியாண்டி சேர்வைக்கு வலம்புரியான் சேர்வை ஒரே மகன் என்றால் சரிதான். முனியாண்டி சேர்வை இறந்த பிறகு வடபுறம் இருந்த சொத்து வலம்புரியான் சேர்வைக்கு வந்தது என்றால் சரிதான். முனியாண்டி சேர்வை கிரயம் பெற்ற சொத்து மற்றும் வலம்புரியான் சேர்வை கிரயம் பெற்ற சொத்து ஆகிய இரு சொத்துக்களும் சேர்ந்து தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். வலம்புரியான் சேர்வை எப்போது இறந்தார் என்றால் தெரியாது. அழகர்சாமிக்கு என்னுடைய தாயார் இராஜேஸ்வரியும், 1ம் பிரதிவாதியும் மக்கள் என்றால் சரிதான். என் தாயாருக்கு 1970ம் வருடம் திருமணம் முடிந்து அவர் பரமக்குடிக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். என் தாயார், அவரது கணவர் மற்றும் பிள்ளைகளுடன் பரமக்குடியில் குடியிருந்தார் என்றால் சரிதான். என் தாயார்

இராஜேஸ்வரி 04.11.1996 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தாயார் உடல்நிலை சரியில்லாமல் இறந்தார். என் தாயார் இறந்த விவரத்தை 1ம் பிரதிவாதிக்கும், எனது தாத்தாவிற்கும் தகவல் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன், அவர்கள் வந்திருந்தார்கள். என் தாத்தா அழகர்சாமி எனது தாயார் இறந்து 11 மாதங்கள் கழித்து 1997 ம் வருடம் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அழகர்சாமி உயிரோடு இருக்கும் காலத்தில் அவரது மகனான 1ம் பிரதிவாதிக்கும், பேரனான பாண்டி என்பவருக்கும் 1989 ம் வருடம் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் மூலம் வழக்கு சொத்தை எழுதிவைத்தார் என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி கிரயங்கள் மற்றும் உயில் குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உயில் சாசனம் செல்லாது என்று நான் பதில்உரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாத்தா 1997 ம் வருடம் இறந்த பிறகு வழக்கு சொத்தில் பாகம்கேட்டு நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். என் தாத்தா இறப்பதற்கு முன்பே ஓட்டுவீடுகளை இடித்துவிட்டு கான்கிரீட் வீடு கட்டிவிட்டார் என்றால் சரிதான். அழகர்சாமி இறந்த பிறகு வழக்கு சொத்தை நானும், பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நாங்களும் அந்த வீட்டில் குடியிருந்தோம். வழக்கு சொத்து வீட்டில் குடியிருந்தது சம்மந்தமாக எனது தகப்பனார் பெயரிலோ, எனது பெயரிலோ கடிதங்களோ, வேறு ஆவணங்களோ உள்ளதா என்றால் இல்லை. அழகர்சாமி உயிரோடு இருந்தவரை வடபுறம் வீட்டில் அவரும், 1ம் பிரதிவாதி குடும்பத்தாரும் குடியிருந்தார்கள் என்றாலும் நாங்கள் அந்த வீட்டில் குடியிருக்கவில்லை என்றாலும் சரியல்ல. என் தாயார் 1996 ம் வருடம் பரமக்குடியில் இருந்தார் என்றால் சரிதான். எனது தாயாரின் இறப்பு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள வீட்டில் தான் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். ஓட்டப்பாலம், வசந்தபுரம், பரமக்குடி என்ற முகவரியில் வசித்தோம் என்றால் சரிதான். எனக்கு எனது தாயார் உயிருடன் இருந்தபோது திருமணம் நடைபெறவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 12.04.2022 ல் இறந்தார். என் தகப்பனார் 12.04.2022 ல் இறந்த பின்பு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தகப்பனார் எங்கு வைத்து இறந்தார் என்றால் மதுரையில் என் தம்பி

வீட்டில் இறந்தார். நான் அப்போது பரமக்குடியில் குடியிருந்தேன் என்றால் இல்லை, இராமநாதபுரத்தில் தென்றல் நகர், பட்டினம் காத்தானில் குடியிருந்தேன். அழகர்சாமி 1997ம் வருடம் இறக்கும்போது அவரது ஒரே வாரிசாக 1ம் பிரதிவாதி மட்டும் தான் இருந்தார் என்றால் சரிதான். அழகர்சாமியின் வாரிசுச்சான்றிதழில் உயிரோடு இருக்கும் வாரிசுகளுக்குத்தான் வழங்கப்படும் என்றால் சரிதான். எனவே எனது தாயாரின் பெயரை வாரிசுச்சான்றிதழில் சேர்க்காமல் வாரிசு சான்றிதழை மறைத்து வாங்கிவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அழகர்சாமி இறந்த பிறகு அவர் எழுதிய உயில் சாசனத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மகன் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வருவாய்த்துறையினர் அழகர்சாமியின் இறப்புச்சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ் மற்றும் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் ஆகியவற்றை பரிசீலனை செய்து பட்டா வழங்கியுள்ளார்கள் என்றாலும் மேற்படி விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என் மாமா 1ம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் இன்று தான் பார்க்கிறேன் என்றால் சரியல்ல. இதற்கு முன்பு 05.10.2021 அன்று என் அத்தை உயிரோடு இருக்கும்போது 1ம் பிரதிவாதியின் வழக்கு சொத்து வீட்டில் வைத்து பார்த்துள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 மகள்கள், 1 மகன். அவர்களது திருமணம் மற்றும் விசேஷங்களுக்கு நான் சென்றுள்ளேனா என்றால் இல்லை. 05.10.2021 அன்று நான் சென்று பார்த்தபோது 1ம் பிரதிவாதியின் மனைவியிடம் பேசினேனா என்றால் இல்லை. அவர் உடல்நிலை சரியில்லாமல் படுத்திருந்தார். 1ம் பிரதிவாதியின் மனைவி 2020ம் வருடம் முதலே நடமாட்டம் இல்லாமல் படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் சரிதான். நீண்டகாலமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். 05.10.2021 அன்று 1ம் பிரதிவாதியின் மனைவி அவரது வீட்டில் இல்லை என்றால் சரியல்ல. அவரது நோயின் தன்மை காரணமாக 1ம் பிரதிவாதியின் மனைவி 09.02.2022 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த இறப்பிற்கு நான் போனேனா என்றால் இல்லை. எனது சகோதரி சென்றிருந்தார். 05.10.2021 அன்று 1ம் பிரதிவாதியை நான் சென்று பார்க்கவில்லை என்றாலும், பாகம் கேட்கவில்லை என்றாலும் அவ்வாறு பார்த்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. 05.10.2021 அன்று 1ம் பிரதிவாதியை நான் பார்த்தபோது அவர் என்ன ஆவணங்கள் கொடுத்தார் என்றால் அழகர்சாமியின் இறப்புச்சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ், வீட்டுவரி ரசீதுகள் மற்றும் பட்டா ஆகியவற்றை கொடுத்தார். அந்த ஆவணங்கள் அனைத்தும் எந்த வருடத்திற்குரிய ஆவணங்கள் என்றால் வரிரசீதுகள் 2006ம் வருடத்திற்குரியது. அந்த ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் பாகம் கேட்டு 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். நானும், எனது சகோதரியும், 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு தான் வா.சா.ஆ.10 என்றால் சரிதான். அதற்குரிய ஒப்புதல் அட்டைகள் தான் வா.சா.ஆ.11 முதல் வா.சா.ஆ.14 வரை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 தவித வேறு வழக்கறிஞர் அறிவிப்பை எதையும் நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து அழகர்சாமிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றாலும் அதில் என் தாயாருக்கு பாகம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. அழகர்சாமிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதால் தான் 1ம் பிரதிவாதிக்கும், அவரது மகனுக்கும் உயில் மூலம் சொத்தை அழகர்சாமி எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த உயில் மூலம் பாத்தியப்பட்டு 1997ம் வருடம் முதல் 1ம் பிரதிவாதியும், அவரது மகனும் பட்டா மாறுதல் செய்து வீட்டுவரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. உண்மையிலேயே என் தாயாருக்கு அழகர்சாமியின் சொத்துக்களில் பாகம் இருந்திருந்தால் அழகர்சாமி இறந்த உடனே வழக்கு தாக்கல் செய்திருப்போம் என்றாலும் அவர் இறந்து 26 வருடங்கள் கழித்து பாகம்கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அழகர்சாமி இறந்த பிறகு வாதிகளும், 1ம் பிரதிவாதியும் வழக்கு சொத்தை கூட்டாக அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நாங்கள் எந்த காலத்திலும் வழக்கு சொத்தில் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. கூட்டு அனுபவத்தில் இல்லை என்பதால் நான் இவ்வழக்கிற்கு செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. என் தாயாருக்கும், தகப்பனாருக்கும் அழகர்சாமி எழுதிவைத்த உயில் சாசனம் குறித்து தெரியும் என்றாலும் எனவே தான் அவர்கள் பாகம்கோரவில்லை என்றாலும் சரியல்ல. என் தகப்பனார் இறந்த பிறகு நான்

பொய்யான தகவல்களை தெரிவித்து பாகம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வருவாய்த்துறையினர் முறைப்படி ஆவணங்களை பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் பட்டாமாறுதல், வாரிசுச்சான்றிதழ் முதலியவற்றை வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

என்னால் தட்டெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டெழுத்து செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.